# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 5 | மே – 2015 | ₹1.00


## நிதியுதவி




சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 1968ஆம் ஆண்டு பி.வி.எஸ்சி. பட்டதாரிகள் நிர்வகித்துவரும் வெற்றி 1968 அறக்கட்டளை, கல்லூரியில் சிறப்பிடம் பெற்ற செல்வி ஒய். மோகனபிரியா (பிவிஎம் 13055), த/பெ திரு. ஆர். யோகநந்தன், உப்புபாளையம், திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு நிதியுதவியாக ரூபாய் 16,255/–ஐ வழங்கியது. இத்தொகையைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 25.03.2015அன்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கோ. துளசி, அறக்கட்டளைச் செயலாளர் டாக்டர் ஏ. சிவகுமார், பொருளாளர் டாக்டர் என். கண்ணன்பாபு, அறக்கட்டளையின் தலைமை நிலையச் செயலாளர் டாக்டர் டி. தனசேகரன், செயற்குழு உறுப்பினர் டாக்டர் ஜி. பால் ப்ரடரிக், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் ம. திருநாவுக்கரசு மற்றும் வெற்றி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## உலகக் கால்நடை மருத்துவ தினம்



உலகக் கால்நடை மருத்துவ தினம் 25.04.2015அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் சிறிய மற்றும் பெரிய அசைபோடும் விலங்குகளுக்கான இலவசக் குடற்புழு நீக்க முகாம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ் ஆகியோர் பங்கேற்றனர். மொத்தம் 77 செல்லப்பிராணிகள் மற்றும் 30 கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து கயத்தாறில் வேட்டை நாய்களுக்குத் தடுப்பூசி அளித்தல் முகாமை நடத்தியது. முகாமில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் பங்கேற்றார். 130 வேட்டை நாய்களுக்கு வெறிநோய்க்கு எதிராகத் தடுப்பூசி போடப்பட்டது. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் “கால்நடை மருத்துவ அறிவியலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது கல்வியே! ஆராய்ச்சியே! விரிவாக்கச் செயல்பாடே!” என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடத்தப்பட்டது. வழக்காடு மன்றத்தைக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பி. சக்திவேலு அவர்கள் துவக்கிவைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, உரையாற்றினார். வழக்காடு மன்றத்தில் பங்குபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## உலகப் புவி நாள்



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 22.04.2015அன்று உலகப் புவி நாள் “வனவிலங்குப் பாதுகாப்பு” என்ற கருத்தை மையமாக வைத்துக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றிப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார். மாணவர் மன்றத் துணைத் தலைவர், பேராசிரியர் முனைவர் நா. நர்மதா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சிறப்பு விரிவுரை

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளநிலைப் பட்டம் பயிலும் நான்காமாண்டு மாணவர்களுக்குச் சேலம், 12 டினன்பின் தேசிய மாணவர் படை, கட்டளை அதிகாரி கர்னல் அஜய்குமார் சிங் அவர்கள் “கால்நடை

மருத்துவப் பட்டதாரிகளுக்கு இந்திய ராணுவத்தில் உள்ள வேலைவாய்ப்புகள்'' குறித்த சிறப்பு விரிவுரையை 09.04.2015அன்று வழங்கினார்.

## ஒருங்கிணைப்புக் கூட்டம்




புதுவாழ்வுத் திட்டப் பயனாளிகள் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறைசார்ந்த அலுவலர்கள் பங்கேற்ற ஒருங்கிணைப்புக் கூட்டம், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தில் 09.04.2015அன்று நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் வி.கே. சண்முகம் இ.ஆ.ப. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் பா. குமாரவேல் அவர்கள் நிலையத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். கால்நடைப் பராமரிப்பு, வேளாண்மை, தோட்டக்கலை, ஆவின், நியூ இந்தியா இன்ஸ்யூரன்ஸ் மற்றும் வங்கிகளைச் சார்ந்த அலுவலர்கள் கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் துறைமூலம் செயல்படுத்தப்படும் நிதியுதவிகள் மற்றும் திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தனர். மாவட்டத் திட்ட மேலாளர் திரு. தனசேகர், புதுவாழ்வுத் திட்டத்தின் கறவைமாடு வளர்ப்பு ஆலோசகர் டாக்டர் அம்பேத்கார் ஆகியோர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

## ஆத்மா – பட்டறிவுப் பயணம்

- கரூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கடவூர் மற்றும் தோகைமலை வட்டார ஆத்மா திட்டத்தின் நிதியுதவியுடன் தஞ்சாவூரில் அமைந்துள்ள மரபு சார்ந்த கால்நடை மூலிகை மருத்துவப் பயிற்சி மையம், இந்திய வேளாண் பொருட்கள் பதனிடும் நிலையம் மற்றும் ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணையங்கள் ஆகியவற்றைக் காண்பதற்கான பட்டறிவுப் பயணத்தை 19.04.2015 மற்றும் 20.04.2015ஆம் தேதிகளில் மேற்கொண்டது. இப்பயணத்தில் ஆறுபண்ணைமகளிர் உட்பட 50 கால்நடைப்பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இவர்களுக்குக் கால்நடைகளுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கான மூலிகை மருத்துவ முறைகள் செயல்விளக்கத்துடன் விளக்கிச் சொல்லப்பட்டன.
- காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையம் ஆத்மா திட்டத்தின்கீழ் வேலூர், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த 147 பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் நிலைய வளாகத்தைக் காண்பதற்கான பட்டறிவுப் பயணத்திற்கு ஏப்ரல் 2015இல் ஏற்பாடு செய்தது.

## பயிற்சி

காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையம், பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த 18 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ''கைவினைப் பொருட்கள் மற்றும் மென்பொம்மைகள் உருவாக்குதல்'' குறித்த கோடைக்காலப் பயிற்சியை 20.04.2015 முதல் 24.04.2015வரை நடத்தியது.

## புதிய பல்கலைக்கழக அதிகாரிகள்



**முனைவர் சி. பாலச்சந்திரன்** அவர்கள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வராக 10.04.2015அன்று பொறுப்பேற்றார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1980இல் இளநிலைப் பட்டப் படிப்பையும், கால்நடை நோய்க்குறியியலில் 1983 மற்றும் 1993இல் முறையே முதுநிலைப் பட்டப் படிப்பையும், முனைவர் பட்டப் படிப்பையும் நிறைவு செய்தார். மேலும், மரபுசார் கால்நடை மருத்துவம் மற்றும் வேளாண் இதழியலில் முதுநிலைப் பட்டயப் படிப்பும் நிறைவு செய்துள்ளார். 1980இல் நாமக்கல், கோழியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்த இவர், 1988இல் இணைப் பேராசிரியராகவும் 1996இல் பேராசிரியராகவும் பணி உயர்வு பெற்றார். பல்கலைக்கழகப் பதிவாளராகவும் (2010–2013) பணியாற்றியுள்ளார். 300க்கும் மேற்பட்ட அறிவியல் கட்டுரைகளை (60 பன்னாட்டு அளவில்) வெளியிட்டிருக்கிற இவர், உலக அளவிலும் மற்றும் தேசிய அளவிலுமான கருத்தரங்குகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். பறவையின நோய்க் குறியியல், பறவையினக் காளான் நச்சு நோய்ப் பாதிப்பு, புற்றுநோய் உயிரியல், மாற்று மருத்துவம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். 20 கையேடுகள், இரண்டு புத்தகங்கள் மற்றும் இரண்டு மடிப்பிதழ்கள் உருவாக்கியுள்ளார். 8 முனைவர் பட்ட மாணவர்களுக்கும், 10 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கும் ஆய்வு நெறியாளராகச் செயல்பட்டுள்ளார். ஆறு கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு கோடைக்காலப் பயிற்சி வகுப்பு, களத்தில் பணிபுரியும் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கான 40 பயிற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து நடத்தியுள்ளார். கிட்டத்தட்ட 60 விருதுகள் பெற்றுள்ளார். பறவையின நோய்க்குறியியலில் சிறந்த ஆய்வேட்டிற்கான பல்கலைக்கழகத்தின் தங்கப் பதக்கம், பறவையின நோய்க்குறியியலில் ஆராய்ச்சியாளர் விருது, இந்தியக் கால்நடை மருத்துவ நோய்க்குறியியலாளர் மற்றும் வாழ்நாள் உறுப்பினர் ஆகிய சிறப்புகளைப் பெற்றுள்ளார். இந்தியக் கால்நடை நோய்க்குறியியலாளர் சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது, தேசியக் கால்நடை மருத்துவ அறிவியல் கழகம் மற்றும் விலங்கு நல அறிவியல் கழகத்தின் ஆராய்ச்சியாளர் விருது ஆகியவை அளித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.



**முனைவர் ச.அ. அசோகன்** அவர்கள், பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநராக 10.04.2015அன்று பொறுப்பேற்றார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1979இல் இளநிலைப் பட்டப் படிப்பையும், 1983 மற்றும் 1990இல் முறையே கால்நடை இனப்பெருக்கத்தில் முதுநிலைப் பட்டப் படிப்பையும், முனைவர் பட்டப்படிப்பையும் நிறைவு செய்தார். 1996இல் கல்வித் தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டயப் படிப்பும் முடித்தார். 45 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 8 பொதுக் கட்டுரைகள், ஒரு புத்தகம், 30 பயிற்சிக் கையேடுகளை வெளியிட்டுள்ளார். 5 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 5 முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாக இருந்துள்ளார். 63 கலந்தாய்வரங்கு / கருத்தரங்கு / மாநாடுகளில் பங்கேற்றுள்ளார். இவர் சுவாமிநாத ஐயர் நினைவுப் பரிசு பெற்றுள்ளார். பல்கலைக்கழக நாட்டுநலப் பணித் திட்ட

ஒருங்கிணைப்பாளராகவும், பல்கலைக்கழக உணவகப் பொறுப்பு அதிகாரியாகவும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியின் துணை விடுதிக் காப்பாளராகவும் பணியாற்றியுள்ள இவர், ஆசிரியர் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளும் வகித்துள்ளார். மேலும், அடிப்படை அறிவியல் புலம் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வராக (2011–2014) பணிபுரிந்துள்ளார்.



**முனைவர் பி.ஐ. கணேசன்** அவர்கள், பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநராக 10.04.2015 அன்று பொறுப்பேற்றார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1980இல் இளநிலைப் பட்டப் படிப்பை நிறைவு செய்த இவர், 1983இல் முதுநிலை மற்றும் 1993இல் முனைவர் பட்டங்களைக் கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவத்தில் நிறைவு செய்தார். 8 முதுநிலை மற்றும் 2 முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாக இருந்துள்ளார். 113 ஆய்வுக் கட்டுரைகளையும், ஆய்வுச் சுருக்கங்களையும் வெளியிட்டுள்ளார். 13 புறநிலை நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். கால்நடைப் பராமரிப்பு தொடர்பாக 300 பயிற்சிகளை நடத்தியுள்ளார். 63 தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள், கலந்தாய்வரங்குகளில் பங்குபெற்றிருக்கிறார். ஐபிடி செயலிழக்கச் செய்யும் தடுப்பு மருந்து மற்றும் இராணிக்கெட் நோய்க்கான தடுப்பு மருந்து உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளார். ஈமு மற்றும் வான்கோழிப் பராமரிப்பு மற்றும் குஞ்சுப்பொரிப்பகப் பயிற்சி முறைகளை உருவாக்கியிருக்கிறார். அமெரிக்காவின் ஒகியோ மாநிலப் பல்கலைக்கழகத்தின் ஊஸ்டர் தடுப்பு மருத்துவத் துறையில் குருதி நிணநீர் கண்காணிப்பு மற்றும் பதிவுசெய்தல் குறித்த பயிற்சி மேற்கொண்டார்.



**முனைவர் காத்த பெருமாள் குமணன்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் அடிப்படை அறிவியல் புல முதல்வராக 10.04.2015 அன்று பொறுப்பு ஏற்றுக் கொண்டார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 1982இல் இளநிலைப் பட்டத்தையும், 1989இல் முனைவர் பட்டத்தையும் பெற்றார். 1985இல் புதுக்கோட்டை, கோழியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நிறுவனப் பேராசிரியரான இவர், கல்லூரியின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பத் துறையில் "மையத் திசு வளர்ப்பு மையம்", "மரபியல் மாற்றம் செய்யப்பட்ட கால்நடை ஆய்வகம்" ஆகியவற்றை ஏற்படுத்திய சிறப்புக்குரியவர். 1993இல் தேசிய உயிர்த் தொழில்நுட்ப இணை ஆராய்ச்சியாளர் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டார். அமெரிக்காவின் கர்னெல் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றியுள்ளார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநராக (2012–2015) பணிபுரிந்துள்ளார். ஜப்பான், இங்கிலாந்து, உகாண்டா ஆகிய நாடுகளுக்குப் கல்விப் பயணம் மேற்கொண்டார். 16 புறநிலை நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார். தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் 122 ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். 1995இல் வழங்கப்பட்ட தமிழ்நாடு அறிவியலாளர் விருது, ஜோனீஸ் நோய் குறித்த பன்னாட்டுக் கூட்டமைப்பு 2007இல் வழங்கிய உதவிக் கரங்கள் விருது உட்பட 11 விருதுகள் பெற்றுள்ளார்.



**முனைவர் இல. குணசீலன்** அவர்கள் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வராக 10.04.2015 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மலேசியாவின் புத்ரா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 23 ஆண்டிற்கும் மேலாக ஆசிரியப் பணியாற்றிருக்கிறார். 7 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 2 முனைவர் பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டியாகப் பணியாற்றியுள்ளார். இவரின் 40 கட்டுரைகள் ஆய்விதழ்களில் வெளிவந்துள்ளன. இவரின் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான பங்களிப்புகள் வருமாறு: மந்தை மற்றும் உடன் விலங்கு நோய்களின் தடுப்பு முறைகளுக்குக் கள அனுபவம் தொடர்பாக மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி; இந்தியத் துணைக் கண்டத்தில் கால்நடைக் கொள்ளை நோய்கள் தொடர்பாக உகாண்டாவில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை; மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகம், மலாவி, தனுவாஸ் இவற்றுக்கிடையேயான முத்தரப்பு ஒப்பந்தத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர்; தமிழ்நாட்டில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தல் வழிமுறைகளின் மதிப்பீடு தொடர்பான இந்தியா மற்றும் பிபிஎஸ்ஆர்சி பங்கேற்பு உடன்படிக்கையின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் ரூபாய் 17.85 இலட்சம் மதிப்பிலான crohn's நோய் தொடர்பான ஆய்வு குறித்த இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத் திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர். இவருக்கு மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பன்னாட்டு நல நிலையத்தின் சிறப்புப் பேராசிரியர் நிலை அளிக்கப்பட்டது. இவர், விலங்குகள் மற்றும் மனிதனில் நாடாப் புழுக்களைக் கண்டறிவதற்கான எலிசா கருவிகலப் பெட்டியை உருவாக்கியுள்ளார். மேலும், முதன்முதலாகப் பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்புப் பிரிவிற்கான மையக் கருத்தை உருவாக்கித் தந்த சிறப்புக்குரியவர் மற்றும் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவம் தொடர்பான இணையவழி முதுநிலைப் பட்டயப் படிப்பைத் துவக்கியுள்ளார்.



**முனைவர் க. ந. செல்வகுமார்** அவர்கள் 10.04.2015 அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். இவர், 1988இல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்து இதுவரை 26 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடைப் பொருளாதாரத் துறையின் தலைவராக 15 ஆண்டு பணிபுரிந்து அங்குப் பொருளாதாரப் புள்ளியியல் ஆய்வகத்தை உருவாக்கினார். அது மட்டுமன்றிக் கடந்த 25 ஆண்டுகளாகப் பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பட்டப் படிப்பு பயிலுவதற்காக மாணவர்களைச் சேர்க்கும் பணியிலும், 15 ஆண்டுகளாக முதுநிலைப் பட்டப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்கும் பணியிலும் உறுப்பினராக ஈடுபட்டிருந்தார். ரூபாய் 346 இலட்சம் மதிப்பிலான 17 ஆய்வுத் திட்டங்களைச் செயல்படுத்தியும், 93 ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தும், 36 மாணவர்களின் ஆராய்ச்சியின் வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளார். பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கு–2020 ஆவணம் தயாரிப்பில்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்தி மடல் – மே– 2015

Posted on 23.05.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.05.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051

**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். மேலும் பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் அகில இந்திய உயர்கல்விக் கருத்தாய்வு மற்றும் கால்நடை, மீன்வளத் துறைத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். 11ஆவது மற்றும் 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட விவசாயத் திட்டத்தை உருவாக்கினார். எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் நிறுவனத் தலைவர் மற்றும் மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் இந்தியக் கால்நடைத் துறைத் தொழில்நுட்பச் சாதனைக் குறியீட்டிற்கான ஆலோசனை வழங்கியுள்ளார்.



**முனைவர் சி. பாலசுப்பிரமணியன்** அவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநராக 10.04.2015 அன்று பொறுப்பேற்றார். இவர் 1986இல் இளநிலைப் பட்டத்தையும், கால்நடை இனப்பெருக்கத்தில் 1988இல் முதுநிலைப் பட்டமும் மற்றும் 1994இல் முனைவர் பட்டத்தையும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பெற்றார். கனடாவின் குயில்ப் பல்கலைக்கழகம் மற்றும் வெஸ்டன் ஒன்டாரியோ பல்கலைக்கழகத்தில் ஒரு ஆண்டு (1997–1998) முது முனைவர் பயிற்சியை முடித்தார். தென் கொரியாவின் ஜியோங்சங் தேசியப் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் (2005–2007) ஆராய்ச்சி விஞ்ஞானியாகப் பணியாற்றினார். 7 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாகச் செயல்பட்ட இவர், முதுநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பலருக்கு உறுப்பினராகவும் இருந்துள்ளார். பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் அளித்துள்ளார். தேசிய மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்களில் இவரின் 138 சிகிச்சையியல் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. மேலும், 64 பொதுக் கட்டுரைகள் மற்றும் மடிப்பிதழ்கள் வெளியிட்டுள்ளார். உலக அளவிலான இளம் விஞ்ஞானி விருது – 1998 உட்பட 31 விருதுகள் பெற்றுள்ளார். தென் கொரியாவின் சியோலில் நடைபெற்ற கால்நடை வளர்ப்பு தொடர்பான 8ஆவது உலக மாநாட்டில் இனப்பெருக்க உடலியங்கியலின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். கால்நடை இனப்பெருக்கத்தில் இவரின் சிறந்த ஆராய்ச்சிப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்தியக் கால்நடை இனப்பெருக்க ஆராய்ச்சிச் சங்கம் இவருக்கு டாக்டர் என்.சி. ஷர்மா நினைவு விருது – 2012 அளித்துச் சிறப்புச் செய்தது. இவர், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார்.

## இரத்ததான முகாம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் செஞ்சுருள் சங்கம் மற்றும் நாமக்கல், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையின் இரத்த வங்கி சார்பில் இரத்ததான முகாம் 27.04.2015அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி முகாமைத் துவக்கி வைத்தார். 47 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் இரத்ததானம் செய்தனர்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் உடைமை அலுவலகக் கண்காணிப்பாளர் திரு. சி. கணேசன் அவர்கள் 30.04.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 12.04.1957இல் பிறந்த இவர் 29 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் ஆய்வக உதவியாளர் திருமதி கே. புஷ்பராணி அவர்கள் 30.04.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 12.04.1957இல் பிறந்த இவர் 22 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையின் ஆய்வக உதவியாளர் திரு. எம். விஜயன் அவர்கள் 30.04.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 10.04.1957இல் பிறந்த இவர் 33 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் வனவிலங்கு அறிவியல் துறையின் திறனறி பணியாளர் திரு. டி. பக்கிரிசாமி அவர்கள் 30.04.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 20.04.1955இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையத்தின் சமையலர் (முதுநிலை) திரு. எம். கோபால் அவர்கள் 30.04.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 03.04.1955இல் பிறந்த இவர், 18 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.